கூட்ட எண் 10 நகராட்சி அலுவலகம்,
2020 - 2021 -ம் ஆண்டு ஆரணி,
நாள் 17.11.2020

2020-ம் ஆண்டு நவம்பர் மாதம் 17.11.2020-ந்தேதி செவ்வாய்க்கிழமை மாலை 4.00 மணியளவில் ஆரணி நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற அவசரக் கூட்ட நடவடிக்கைகள்.

ஆரணி நகராட்சி 2018-ஆம் ஆண்டு திறந்த வெளியில் கழிப்பிடமாக பயன்படுத்தும் நிலை இல்லையென்று சான்று மத்திய அரசின் நகர்புறம் மற்றும் வீட்டு வசதி அமைச்சகத்தின் சான்று பெற்றுள்ளது. தற்போது இந்நகராட்சி பகுதிகளில் தனிநபர் கழிப்பறைகள் கட்டுதல், சமுதாய கழிப்பறைகள் கட்டுதல் ஆகிய பணிகள் முழுமையாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. தற்போது திறந்தவெளி கழிப்பிடங்களற்ற நகராட்சி (ODF+) என அறிவிக்கவும் இது சம்மந்தமான நகராட்சி அறிவிப்பினை பொது மக்கள் தங்கள் ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபனைகள் கோரி ஏதேனும் ஒரு தினசரி தமிழ் நாளிதழில் வெளியிட்டு தொடர் நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு: **1. மன்றம் அனுமதிக்கலாம்.**(ந.க.எண். 1085/2018/எச்1)

2. ஆரணி நகராட்சி 2018-ம் ஆண்டு திறந்த வெளியில் கழிப்பிடமாக பயன்படுத்தும் நிலை இல்லையென்று சான்று மத்திய அரசின் நகர்புறம் மற்றும் வீட்டு வசதி அமைச்சகத்திடமிருந்து பெற்றுள்ளது. தற்போது இந்நகராட்சியில் தனிநபர் கழிப்பறைகள் கட்டுதல், சமுதாய கழிப்பறைகள் மற்றும் பொது கழிப்பறைகள் கட்டுதல் பணிகள் மேற்கொண்டு முழுமை அடைந்த நிலையில் தற்போது திறந்த வெளி கழிப்பிடங்களற்ற நகராட்சியாக அறிவிக்க (ODF+) க்கு 28.10.2020 அன்று மன்றத்தில் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டு, பொதுமக்களின் ஆட்சேபனைக்களுக்காக 29.10.2020 அன்று செய்தித்தாள்களில் விளம்பரம் செய்யப்பட்டது. தற்போது எந்த வித ஆட்சேபனையும் பொதுமக்களிடமிருந்து பெறப்படாத நிலையில் ODF+ விண்ணப்பிக்க முன்மொழிவுகள் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு அனுப்ப மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது.
அலுவலக குறிப்பு: **1. மன்றம் அனுமதிக்கலாம்.**(ந.க.எண். 1085/2018/எச்1)